சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

# 16-02-2012 அன்று நடந்த உரையாடலின் பொழிப்பு

## தலைப்பு : யாழ்ப்பாண நகரத் திட்டமிடல் எதிர்நோக்கும் சமூக அரசியல் சிக்கல்கள்

### தொடக்கவுரையாடல் : சந்திரகாசன்

Master Plan என்பது ஒரு நகரத்தின் நீண்டகாலத் திட்டமிடல். இது இப்போது சில வருட இடைவெளிகளில் நகரத்திற்கு ஏற்றபடி மாற்றப்படுவதால் அதை இப்பொழுது Master Plan என்று சொல்லுவதில்லை.

திட்டமிடல் என்பது நகரத்தை உருவாக்குவதற்காக அல்ல அதன் உருவாக்கத்தை கட்டுப்படுத்தவே பயன்படுகிறது.

இந்தத் திட்டமிடலின் அடிப்படையில் தான் நகரத்தின் அபிவிருத்திக் கட்டுமானங்கள் நடைபெற வேண்டும். இது உலக சமூக அரசியல் பொருளாதார மாற்றங்கள் போன்றவற்றின் தாக்கத்தால் மாற்றம் அடைகின்றது.

Master Plan ஆனது எல்லா நகரங்களுக்கும் இருக்கவேண்டும். ஆனால் துரதிஷ்டவசமாக கொழும்புக்கே அது இல்லை.
இப்பொழுது தான் அப்படி ஒரு ப்ளான் ஏற்படுத்தும் முயற்சி நடக்கிறது.

இலங்கையில் இப்போதிருக்கும் கட்டுப்பாடுகள் நூறு வருடங்களின் முன் மேற்குலகநாடுகளில் இருந்த கட்டுப்பாடுகள் அளவுக்கு கூட இல்லை.

ஒரு சிறந்த நகரத்திட்டமிடல் உள்ள நாட்டில் ஒரு வீட்டை கட்டுவதற்கு நகரத் திட்டத்தின் தலையீடு அதிகமாக இருக்கும்.
ஒரு வீடு கட்டும்போது கூட அதனால் சூழலில் ஏற்படும் மாற்றங்கள், எவ்வளவு தூரம் மற்றவரை பாதிக்கும், எவ்வளவு தூரம் நீண்டகாலத் திட்டத்தை பாதிக்கும் போன்ற அத்தனையும் கணிக்கப்பட்டு அதனடிப்படையில் சட்டங்கள் அனுமதித்தால் மட்டுமே வீட்டைக் கட்டமுடியும்.

இப்போது மேலும் மேலும் கட்டுப்பாடுகள் சேர்த்துக்கொள்ளப் பட்டுக் கொண்டே உள்ளன. உதாரணமாக ஊனமுற்றோர் எந்த தடையும் இன்றி அந்த கட்டுமானங்களை பயன்படுத்தல்

ஒரு கட்டடத்தை கட்டும் பொது அது உள்ளடங்கும் மாநகரசபை , மாகாணசபை , நாட்டின் திட்டமிடல்களின் அடிப்படையில் உள்ளனவா என்று பரிசோதித்தபின்பு அந்தக் கட்டிடம் வரும் இடத்திற்கு அருகில் கால்வாய்கள் அல்லது ஆறுகள் அல்லது தொல்பொருள் அம்சங்கள் இருப்பின் அவை சார்ந்த துறையிடம் கலந்தாலோசித்து செயற்படவேண்டும்

யாழ்பாணம் போன்ற இலங்கையின் நகரங்களில் ஒருகட்டிடத்தின் அமைப்பை கட்டுப்படுத்துவது அதனை கட்டுபவரின் விருப்பமாகவே உள்ளது. யாழ்ப்பாணத்தில் நல்லூரில் ஐந்து நட்சத்திர விடுதி அமைவதை தான் விரும்புகிறேன் என்று யாழ்ப்பாண மேயர் அண்மையில் கூறியிருக்கிறார். இந்தமாதிரி விடயங்கள் தனிப்பட்ட மனிதர்களின் விருப்பத்துக்கு அமைவாக செய்யப்படுவதில்லை. மேயருடையது ஒரு பொறுப்பற்ற கருத்தாகும். அந்த இடத்தில் ஐந்து நட்சத்திர விடுதி அமைவது நகரத்திட்டமிடலுக்கு அமைவாக உள்ளதா என்பது பற்றி மேயர் தேடியறிந்திருக்க வேண்டும். அந்தத்திட்டமிடல் ஆவணங்களின் அடிப்படையிலேயே அவர் இவ்வாறான கருத்தொன்றைக்கூற முடியுமே அல்லாமல் "தன்னுடைய விருப்பத்தை" எல்லாம் நகரத்திட்டமாக கூற முடியாது.

உலகில் உள்ள பெரும்பான்மையான நகரங்கள் தமது பிரதான இடங்களை நீர்ப்பரப்பினை அண்டியவகையில் அமைத்துள்ளன.
ஒரு திட்டமிடப்பட்ட பெரிய நகரமொன்றை திட்டத்தின் படி பேணுவதற்கு போதுமான சனத்தொகை தேவை.
நகரம் எனும்போது அது இன மத சாதிய அடையாளங்களைத் தாங்கிக் கொண்டிருக்கக் கூடாது.

நகரம் என்பது எல்லத்தரப்பினருக்குமானதாக இருக்கவேண்டும். (எடுத்துக்காட்டாக சமப்பாலுறவாளர்கள், சிறுபான்மையினருக்கு நட்பாக இருத்தல் )எல்லோரையும் கவரக் கூடியதாக இருக்கவேண்டும். நகரம் என்பது எல்லாவிதத்திலும் பாதுகாப்பானதாக இருக்கவேண்டும்.

மிகுதி அடுத்த பக்கம்

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



## அடுத்து வரும் தலைப்புக்கள்

**மரபணு மாற்றப்பட்ட உணவுப்பொருட்கள்**
சுகந்தன் | 23-02-2012

**செவிப்புலன் அற்றோர் எதிர்கொள்ளும் சவால்களும் அவற்றுக்கான தீர்வுகளும்**
மார்க்ஸ் பிரபாகர் | 01-03-2012



உ. வே. சா

உ. வே. சாமிநாதையர் (பெப்ரவரி 19,1855 - ஏப்ரல் 28, 1942, உத்தமதானபுரம் வேங்கடசுப்பையர் சாமிநாதையர் சுருக்கமாக உ.வே.சா சிறப்பாக தமிழ் தாத்தா) ஒரு தமிழறிஞர்.

பலரும் மறந்து அழிந்துபோகும் நிலையிலிருந்த பண்டைத் தமிழ் இலக்கியங்கள் பலவற்றைத் தேடி அச்சிட்டு பதிப்பித்தவர். இருபதாம் நூற்றாண்டின் தொடக்கத்தில் தமிழுக்குத் தொண்டாற்றியவர்களுள் உ. வே. சாமிநாதையர் குறிப்பிடத்தக்கவர். தமது அச்சுப்பதிப்பிக்கும் பணியினால் தமிழ் இலக்கியத்தின் தொன்மையையும், செழுமையையும் அறியச் செய்தவர். உ.வே.சா 90 க்கும் மேற்பட்ட புத்தகங்களை அச்சுப்பதிப்பதித்தது மட்டுமின்றி 3000 க்கும் அதிகமான ஏட்டுச்சுவடிகளையும் கையெழுத்தேடுகளையும் சேகரித்திருந்தார்.

## சமூக விஞ்ஞான கற்கை வட்டம்

சமகால அரசியலிலும் சமூக வாழ்விலும் தொழிநுட்பத்திலும் நிகழும் முக்கிய நடப்புக்களை ஆழமாகக் கற்றறிந்துகொள்ளுமுகமாக வாரம் தோறும் வியாழக்கிழமைகளில் பிற்பகல் 5.30 மணிக்கு சமூக விஞ்ஞானக் கற்கை வட்டம் கூடுகிறது.

அரசியல், தொழிநுட்பம், சமூகம் எனப் பல்வேறு பரப்புக்களில் தெரிவு செய்யப்படும் தலைப்புக்களில் ஒவ்வொரு வாரமும் ஆழமான திறந்த கலந்துரையாடல் இடம்பெறும்.

நாம் வாழும் இந்தச் சமூகத்தைக் கற்றறிந்து புரிந்துகொள்ளவும் அப்புரிதலிலிருந்து இச்சமூகத்தை வளர்த்தெடுக்கவும் உங்கள் அனைவரையும் சமூக விஞ்ஞான கற்கை வட்டம் அழைக்கிறது.

சமூக விஞ்ஞான கற்கை வட்டம்
தேசிய கலை இலக்கியப் பேரவை,
571/15. காலி வீதி,
வெள்ளவத்தை
0772307807
0772260165

Facebook group :
facebook.com/groups/ssscircle/

வலைத்தளம் :
circle.thulaa.net

செய்திமடல் - 40 | 23-02-2012

## வலை

### பிள்ளை வளர்ப்பு: ஒரு குடும்ப வன்முறை!

தனது குழந்தைப் பருவத்தைச் சுரண்டுவதைச் சகித்துக் கொள்ள முடியாமல் ஆளாக்கிய அப்பாவின் கன்னத்திலேயே அறைந்து விட்டான் அந்தச் சிறுவன்.

இலகு முகவரி : **valai.thulaa.net/71**

http://www.vinavu.com/2012/02/18/growing-up-a-kid/

### பட்டினிச் சாவில் பல இலட்சம் இலாபம் சம்பாதிக்கலாம் !

அவர்களைப் பொறுத்த வரையில், "பங்குச் சந்தைக்கும், பட்டினிச் சாவுக்கும் சம்பந்தம் இல்லை!" எங்கேயோ ஒரு ஆப்பிரிக்க அல்லது ஆசிய நாட்டு மக்கள் சாவதைப் பற்றி அவர்களுக்கு என்ன கவலை? பிணத்தை, பணமாக்கும் மந்திர வித்தை தெரிந்தவர்கள் அல்லவா?

இலகு முகவரி : **valai.thulaa.net/72**

http://kalaiy.blogspot.com/2012/02/blog-post_21.html

### டர்பன் மாநாடு: ஆடுகள் மீது பழிபோடும் ஓநாய்கள்!

அமெரிக்கா, ஐரோப்பிய ஒன்றியம், ரஷ்யா, ஜப்பான் ஆகிய ஏகாதிபத்திய வல்லரசுகளே பசுமைக்குடில் வாயு வெளியேற்றத்தை அதிகரித்துப் புவி வெப்பமடைதலைத் தீவிரமாக்கும் முதன்மைக் குற்றவாளிகள்.

இலகு முகவரி : **valai.thulaa.net/73**

http://www.vinavu.com/2012/02/17/durban-climate-change-conference/

### Government Saving Billions Says Basil

*Economic Development Minister Basil Rajapaksa says the kerosene subsidy to be given to low-income households without electricity is a minimal expenditure for the government given the saving of Rs. 5 billion due to the price revision.*

இலகு முகவரி : **valai.thulaa.net/74**

http://www.thesundayleader.lk/2012/02/19/government-saving-billions-says-basil/

### Marie Colvin Dead: Sunday Times Journalist Killed In Homs, Syria

*The American-born Colvin, who was based in Britain, was a highly respected foreign correspondent who had reported on the Middle East for more than two decades.*

இலகு முகவரி : **valai.thulaa.net/75**

http://www.huffingtonpost.co.uk/2012/02/22/marie-colvin-sunday-times-syria-homs-remi-ochlik_n_1292908.html?ref=fb&src=sp&comm_ref=false

சமூக விஞ்ஞான கற்கை வட்டத்தின் செய்தி மடல்களைப் படியெடுக்கவும் அச்சிட்டுப் பகிரவும் அனைவருக்கும் உரிமையுண்டு. இதில் வெளிவரும் ஆக்கங்களை மூலத்தைக் குறிப்பிட்டு எங்கும் பிரசுரிக்கலாம்.

BY NC SA

## யாழ்ப்பாண நகரத் திட்டமிடல் எதிர்நோக்கும் சமூக அரசியல் சிக்கல்கள்

முன்பக்கத் தொடர்ச்சி..

யாழ்பாணத்தின் ஆரம்ப திட்டம் ( போத்துக்கேயர், டச்சு ) வலயங்களை சரியாக வகுத்தபடி உள்ளது. ஆனாலும் அதன் பின் வந்த அதிகாரத்தில் இருந்தவர்கள் கவனத்தில் கொள்ளாமல் விட்டுவிட்டனர்.

வலயங்கள் முறையாக இல்லாவிட்டால் நகரம் ஒரு குழப்பமான நகரமாக மாறிவிடும்.

வீதிகள் சரியான முறையில் வகைப்படுத்தப்பட்டு அதற்கேற்ற வகையில் போக்குவரத்து ஒழுங்குபடுத்த வேண்டும்.

சில கட்டட மீள் அமைப்புக்களும் பழைய கட்டட அமைப்பிலேயே இருக்கவேண்டும் என எதிர் பார்கின்றனர்.

நீண்ட கால திட்டமிடல்களால் குறுகிய காலத்தில் வாக்கு சேகரிக்க முடியாமல் உள்ளதால் அரசியல் வாதிகளால் திட்டமிடல் பற்றி சிந்திக்கப் படுவதில்லை

கொழும்பில் அண்மைய நகரத்திட்டமிடலின் கீழ் சேரிகளும் நடைபாதைக்கடைகளும் கட்டாயத்தின் பேரில் அகற்றப்படுவது அவற்றோடு தொடர்புடைய வருமானம் குறைந்த மக்களை மேலும் நெருக்கடிக்குள்ளாக்குகிறது. மக்கள் நலன் அடிப்படையில் பார்த்தால் நகரத்திட்டமிடல் என்பது சாதாரண ஏழை எளிய மக்களுக்கு எதிரானதாகவல்லவா இருக்கிறது என்ற கேள்வி உரையாடலின் போது எழுப்பப்பட்டது. அதற்குப் பதிலளிக்கையில், இவ்வாறு வலுக்கட்டாயமாகவும் அவசர அவசரமாகவும் மக்களை வெளியேற்றுவதென்பது தவறான நகரத்திட்டமிடலும் அமுலாக்கமுமாகும். அடர்த்தியான சேரிகள் போன்ற இடங்களில் மெல்ல மெல்ல, அவர்களது சமூகக்கட்டமைப்பைக் குலைக்காத வகையிலேயே வளர்ச்சித்திட்டங்களை அறிமுகப்படுத்தவேண்டும் என்று பதிலளிக்கப்பட்டது.

## மரபணு மாற்றப்பட்ட உணவுப்பொருட்கள்

**இந்த வாரம் உரையாடப்படவுள்ள தலைப்பு. (சுகந்தன்)**

1. பின்னணியில் உள்ள விஞ்ஞானம்
2. நன்மைகள் /பலன்கள் மற்றும் தீமைகள்
3. மரபணு மாற்றப்பட்ட உணவுப்பொருட்களும் அவற்றை வளர்ப்பதற்கான முறைகள்
4. அவற்றுக்கான குறியீட்டு முறைகள்
5. அவற்றின் மீதுள்ள விமர்சனங்கள்
6. மனித சுகாதார கவனம்
7. பொருளாதாரப் பார்வை
8. அரசாங்கங்களின் பங்களிப்பு
9. முடிவுரையும் கலந்துரையாடலும்




Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org